செ.கு. எண்: 226.

நாள்: 03/12/2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 3 .12. 2011

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக 2.12.2011 அன்று விழுப்புரம் மாவட்டம், கண்டம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் பரமசிவம் மற்றும் திரு. ஜெயராமன் என்பவரின் மகன் ராஜலிங்கம்; விருதுநகர் மாவட்டம், கன்னிசேரி புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் சுந்தரமூர்த்தி ஆகியோர் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

கனமழை காரணமாக மரணமடைந்த இந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9